# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1990 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

*[1990, ஓகத்து மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*1990 ஓகத்து மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு : ரூபா 1.00

# 1990 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[1990, ஓகஸ்ட் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 3/89
2006

## கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 31அ எனும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *131 ஆம் அத்தியாயத்தின் 31அ எனும் பிரிவைத் திருத்துதல்.*

(2) "நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர், தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன்—

(அ) தொழில் நியாய சபைக்கு 31ஆ எனும் பிரிவின்கீழ் விண்ணப்பங்கள் செய்யப்படக்கூடிய முறையையும்; அத்துடன்

(ஆ) இப்பாகத்தின்கீழ் அந் நியாயசபையின் முன்னரான ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில் தொழில் நியாய சபையினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையையும்,

விதித்துரைத்து ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31இ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 இ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

"*31 ஆ என்னும் பிரிவின் கீழான விண்ணப்பங்கள் தொடர்பில், தொழில் நியாய சபைகளினது கடமைகளும் தத்துவங்களும்.*

31இ. (1) தொழில் நியாய சபை ஒன்றிற்கு 31ஆ என்னும் பிரிவின்கீழான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, அவ் விண்ணப்பம் பற்றி நியாய சபை அவசியம் எனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகள் யாவற்றையும் செய்வதோடு அத்தகைய சான்றுகள் யாவற்றையும் கேட்டலும் அத்துடன் அதன், பின்னர் அத்தகைய விண்ணப்பத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் நீதியானதும் ஒப்புரவானதுமென நியாயசபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்குதலும் நியாய சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) விசாரணையொன்றை நடாத்துகின்ற தொழில் நியாயசபையொன்று, நியாயசபையின் முன்னர் வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்படுவது தொடர்பில் 31அ என்னும் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"தொழில் நியாய சபையின் கட்டளையிலிருந்து எழுகின்ற சட்டப் பிரச்சினை மீது மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தல்.

31ஈ. (1) பிரிவு 31ஆ வின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் இறுதியில் தொழில் நியாயசபையினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் உடனடியாகவோ, நியாயமான ஒரு காலத்திற்குள் அத்தகைய விண்ணப்பத்திற்கான எல்லாத் திறத்தவர்களுக்கும் முன்னரே தேதி அறிவிக்கப்பட்டதான ஒரு தேதியில் கூடுகின்ற நியாய சபையின் அமர்வொன்றின்போதோ எடுத்து மொழியப்படல் வேண்டும்.

(2) மூன்றும் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு தவிர, தொழில் நியாயசபையொன்றின் கட்டளையொன்று முடிவானதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், அது நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) தொழில் நியாயசபையொன்றிற்கு விண்ணப்பமொன்றைச் செய்கின்ற வேலையாள், தொழிற்சங்கம் அல்லது அவ்விண்ணப்பமானது எத்தொழில்தருநர் தொடர்பானதோ அத்தொழில்தருநர், அவ்விண்ணப்பம் மீதான நியாயசபையின் கட்டளையினால் அதிருப்தியுறுமிடத்து, அத்தகைய வேலையாள், தொழிற்சங்கம் அல்லது தொழில்தருநர், சட்டப்பிரச்சினையொன்றின் மீது அக்கட்டளையிலிருந்து, மற்றைய திறத்தவரை எதிர்வாதியாகக் குறிப்பிடும் எழுத்திலான மனுமூலம், எம்மாகாணத்தினுள் அத்தகைய தொழில் நியாயசபையானது அமைந்துள்ளதோ அம்மாகாணத்திற்கென, அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) (அ) தொழில் நியாய சபையொன்றின் கட்டளைக்கெதிராக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்கின்றவரான அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளைக்கெதிராக மீளாய்வுக்கென விண்ணப்பமொன்றைச் செய்கின்றவரான ; அல்லது

(ஆ) தொழில் நியாய சபையொன்றின் தலைவருக்கெதிராக அத்தகைய தலைவரால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தொடர்பில் உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டு எழுத்தாணை, மேற்செல் எழுத்

தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை ஒன்றின் தன்மையில் கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்றைச் செய்கின்றவரான,

தொழில் தருநர் ஒவ்வொருவரும் அத்தகைய நியாய சபைக்கு—

(i) அத்தகைய மேன்முறையீட்டின் அல்லது விண்ணப்பத்தின் விடயப் பொருளாகிய கட்டளை வேலையாளுக்கு ஒரு தொகைப் பணத்தை மட்டுமே செலுத்துவதற்குப் பணிக்கும் ஏதேனும் விடயத்தில், அத்தகைய பணத்தொகைக்குச் சமமான ஒரு தொகையிலான ;

(ii) அத்தகைய மேன்முறையீட்டின் அல்லது விண்ணப்பத்தின் விடயப்பொருளாகிய கட்டளை, வேலையாளை மீள வேலைக்கமர்த்துமாறு மட்டுமே பணிக்கும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய வேலையாளின் சேவைகள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அவரது மாதச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரண்டு மடங்கிற்குச் சமமான ஒரு தொகையிலான ;

(iii) அத்தகைய மேன்முறையீட்டின் அல்லது விண்ணப்பத்தின் விடயப் பொருளாகிய கட்டளை, வேலையாளுக்கு ஒரு தொகைப் பணத்தைக் கொடுப்பதற்கும் அத்துடன் அவரை மீள வேலைக்கமர்த்துவதற்கும் ஆகிய இரண்டிற்கும் பணிக்கும் ஏதேனும் விடயத்தில், அத்தகைய பணத்தொகைக்கும் அத்துடன் அத்தகைய வேலையாளின் சேவைகள் முடிவுறுத்தப்பட்ட நேரத்தில் அவரது மாதச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரண்டு மடங்கிற்கும் சமமான ஒரு தொகையிலான.

காசுப் பிணைப்பொறுப்பினைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

வேலையாள் ஒருவரின் மாதாந்தச் சம்பளத்தின் அல்லது வேதனத்தின் பன்னிரண்டு மடங்குக்குச் சமமானவொரு தொகையிலான பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவுமாறு இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தொழில் தருநர் ஒருவர் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, நாளாந்தம் செலுத்தப்படுபவரான வேலையாள் ஒருவரின் விடயத்தில், அத்தகைய மாதாந்தச் சம்பளம் அல்லது வேதனம் அத்தகைய வேலையாளரின் நாளாந்த வேதனத்தின் இருபத்தாறு மடங்கெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு தொழில் நியாயசபையின் தலைவரும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பிணைப்பொறுப்பாகக் கொடுத்துதவப்பட்ட எல்லாப் பணங்களையும் இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் வட்டியுடன் பெறக்கூடிய கணக்கில் வைப்பிலிடுவித்தல் வேண்டும்.

(6) உறுப்புரை 154ஞ இன் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மேல் நீதிமன்றத்திற்கான மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் ஐந்து ரூபாய் பெறுமதியான கையொப்பமிட்டு அழிக்கப்படாத முத்திரையைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன், காசுப்பிணை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர் தேவைப்படுத்தப்படும் ஒவ்வொரு விடயத்திலும், மேன்முறையீட்டாளர் அத்தகைய பிணையைக் கொடுத்துள்ளார் என்பதற்கத்தாட்சியாகத் தொழில் நியாயசபையின் தலைவருடைய கையொப்பத்துடன் கூடிய ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும். மேன்முறையீட்டுக்கான மனுவானது, எக்கட்டளையிலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அக்கட்டளைத் தேதியிலிருந்து கணக்கிடப்படும் முப்பது நாட்கள்கொண்ட ஒரு காலப்பகுதிக்குள் (எக்கட்டளையிலிருந்து மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அக்கட்டளை ஆக்கப்பட்ட நாள் உள்ளடங்கலாக ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளும் பொது விடுமுறை நாட்களும் நீங்கலாக) மேல் நீதிமன்றத்தில் கோப்பிலிடுதல் வேண்டும்.

(7) அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மேல்நீதிமன்றமானது, தொழில் நியாய சபையொன்றின் கட்டளையொன்றிலிருந்து (3) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்கு முன் வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றை அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளைக்கு எதிராகச் செய்யப்பட்ட மீளாய்வுக்கான விண்ணப்பமொன்றை, அத்தகைய மேன்முறையீடு அல்லது விண்ணப்பம், மேல் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள் விசாரித்து இறுதியாகக் கையுதிர்த்தல் வேண்டும்.

(8) நாலாம் உட்பிரிவின், (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பக்காரர், அவ்வுட்பிரிவினால் கொடுத்துதவுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட பிணைப்பொறுப்பைக் கொடுத்துதவியுள்ளார் என்னும் பயன்படவமைந்ததும் தொழில் நியாய சபையின் தலைவரது கைப்பட வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்று இணைக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ்ச் செய்யப்படும் ஒரு மேன்முறையீட்டை கேட்டுக் கையாளுதல் தொடர்பான எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், நீதவான் நீதிமன்றங்களிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பிலான குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தியாயம் XXVIII இன் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(10) இப்பிரிவில்—

"அங்கீகரிக்கப்பட்ட வங்கி" என்பது நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் வைப்பாளர்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் இப்பிரிவின் நோக்கங்களுக்காக. காலத்திற்குக் காலம், நியமிக்கக்கூடியவாறான ஒரு வங்கி எனப்பொருளாகும்; அத்துடன்,

"தொழில்தருநர்" என்பது தொழில்தருநராயில்லா தொழிந்த அத்துடன் 31ஆ பிரிவின் உட்பிரிவு (6) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஓர் ஆளையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31 ஈஈ, 31 ஈஈஈ அத்துடன் 31ஈஈஈஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஈ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுவதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 31ஈஈ, 31ஈஈஈ, 31ஈஈஈஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

மேல்நீதிமன்றத்திலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்தலும், மேன்முறையீடு மீதான உயர் நீதிமன்றத்தின் தத்துவங்களும்.

31ஈஈ. (1) தொழில் நியாய சபையொன்றின் கட்டளையொன்று தொடர்பில் சட்டத்தினால் மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அல்லது சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட மீளாய்வு நியாயதிக்கத்தைப் பிரயோகிக்கையில், அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் ஏதேனும் இறுதிக் கட்டளையால் இடருறும் எவரேனும் வேலையாள், ஏதேனும் தொழிற்சங்கம் அல்லது எவரேனும் தொழில்தருநர், அதிலிருந்து, மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லது உயர் நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் பெற்று உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) உயர் நீதிமன்றமானது, 31ஈ எனும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் அத்தகைய மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டின் மூலமான தனியானதும் புறநீங்கலானதுமான நீதிநெறிக் கவனத்தைக் கொண்டிருத்தல் வேண்டு

மென்பதுடன், அத்தகைய மேல் நீதிமன்றத்தின் ஏதேனும் அத்தகைய கட்டளையை உறுதிப்படுத்தலாம், எதிர்மாறுக்கலாம், அல்லது வேறுபடுத்தலாம். அத்துடன் விடயத்திற்கேற்றவாறு தேவைப்படுத்தக்கூடியவாறாக ஏதேனும் தொழில் நியாயசபைக்கு அத்தகைய பணிப்புரைகளை விடுக்கலாம், அல்லது புதிய விளக்கத்திற்குக் கட்டளையிடலாம் அல்லது மேலதிக விசாரணைக்குக் கட்டளையிடலாம் அத்துடன், நீதியின் அக்கறைகள் அவ்வாறு தேவைப்படுத்துமாயின் புதிய அல்லது மேலதிக சான்றைக் கோரலாம், அழைக்கலாம் அத்துடன் அனுமதிக்கலாம். அத்துடன் அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய சான்றானது அத்தகைய மேல் நீதிமன்றத்தினால் அல்லது ஏதேனும் தொழில் நியாயசபையினால் பதியப்படுதல் வேண்டும் எனப் பணிக்கலாம்.

(3) உயர் நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டொன்றை, அத்தகைய மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் விசாரித்து இறுதியாகக் கையுதிர்த்தல் வேண்டும்.

"மேன்முறையீட்டு நிதிமன்றத்திற்கான விண்ணப்பங்களும் அங்கிருந்து உயர் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன் முறையீடுகளும் ஓராண்டிற்குள் கையுதிர்க்கப்படல் வேண்டும் என்பது.

31ஈஈஈஈ (1) தொழில் நியாயசபை யொன்றின் தலைவருக்கெதிராக அத்தகைய தலைவரால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தொடர்பில் உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டு எழுத்தாணை, மேற்செல் எழுத்தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை ஒன்றின் தன்மையில் கட்டளையொன்றை வழங்குவதற்காக மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, மேன்முறையீட்டு நீதிமன்றமானது அத்தகைய விண்ணப்பம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அத்தகைய விண்ணப்பத்தை விசாரித்து இறுதியாகக் கையுதிர்த்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்று உயர்நீமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளவிடத்து உயர் நீதிமன்றமானது, அத்தகைய மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் அத்தகைய மேன்முறையீட்டை விசாரித்து இறுதியாகக் கையுதிர்த்தல் வேண்டும்.

மேன்முறை யீட்டை அல்லது விண்ணப் பத்தைத் தீர்மானத்தின் மீது பிணைப் பொறுப்பு கொடுத்தல்.

31சசசச. (1) அரசியலமைப்பின் 154ரு என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்ற மொன்று, 31சச என்னும் பிரிவின் கீழ் அதன்முன் வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது அல்லது தொழில் நியாயசபையின் கட்டளைக்கெதிராக அதற் குச் செய்யப்பட்ட மீளாய்வுக்கான விண்ணப்பம் ஒன் றின்மீது—

(அ) மேன்முறையீட்டின் அல்லது விண்ணப்பத்தின் விடயப் பொருளான தொழில் நியாயசபை யின் கட்டளையை உறுதிப்படுத்துமிடத்தும் அத்துடன் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் மேல் நீதிமன்றத்தின் அத்த கைய கட்டளையிலிருந்து உயர் நீதிமன்றத் திற்கு 31சச என்னும் பிரிவின் கீழ் மேன் முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத் தும், அத்தகைய தொழில் நியாயசபையின் தலைவர் 31ச (4) எனும் பிரிவின் கீழ் கொடுத் துதவப்பட்ட பிணைப்பொறுப்பை, அதன் மீது திரட்டிய வட்டியுடன் சேர்த்து வேலையா ளுக்குச் செலுத்தப்படச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய மேன்முறையீட்டின் அல்லது விண் ணப்பத்தின் விடயப்பொருளான தொழில் நியாயசபையின் கட்டளையை எதிர்மாறுக் குமிடத்தும் அத்துடன் அதற்கென அனு மதிக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய மேல் நீதிமன்றக் கட்டளையிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு 31சச என்னும் பிரிவின் கீழ் மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப் படாதவிடத்தும், அத்தகைய தொழில் நியாய சபையின் தலைவர், 31ச (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்து தொழில் தருநருக்குத் திருப்பிச்செலுத்தப் படச் செய்வித்தல் வேண்டும்;

(இ) அத்தகைய மேன்முறையீட்டின் அல்லது விண் ணப்பத்தின் விடயப்பொருளான தொழில் நியாயசபையின் கட்டளையை எதிர்மாறுக் குமிடத்தும் அத்துடன் அதற்கென அனு மதிக்கப்பட்ட காலத்திற்குள் மேல் நீதிமன் றத்தின் அத்தகைய கட்டளையிலிருந்து 31சச என்னும் பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு மேன்றையீடு முன்வைக்கப்படாதவிடத் தும், தொழில் நியாயசபையின் தலைவர், மேல்

நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பணத்தொகை, அப்பணத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து 31ஈ (4) என்னும் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பிலிருந்து வேலையாளுக்குச் செலுத்தப்படச் செய்வித்தலும் வேண்டும் என்பதுடன், மீதி ஏதுமிருப்பின், அதனைத் தொழில்தருநருக்குத் திருப்பிக் கொடுக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றம், தொழில் நியாயசபையொன்றின் கட்டளையொன்று தொடர்பில் உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டு எழுத்தாணை, மேற்செல் எழுத்தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை ஒன்றின் தன்மையில் கட்டளையொன்று அளிப்பதற்காக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மீது—

(அ) விண்ணப்பத்தை மறுக்கின்றவிடத்தும் அத்துடன் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய மறுப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்தும், தொழில் நியாயசபையின் தலைவர், 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப் பொறுப்பு அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்து வேலையாளுக்குச் செலுத்தப்படச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) தொழில் நியாயசபையின் கட்டளையை நீக்குகின்றவிடத்தும் அத்துடன் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கெதிராக உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்து, அத்தகைய தொழில் நியாயசபையின் தலைவர் 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்துத் தொழில் தருநருக்குத் திருப்பிக் கொடுக்கப்படச் செய்வித்தல் வேண்டும்;

(இ) தொழில் நியாயசபையின் கட்டளையை வேறுபடுத்துகின்றவிடத்தும் அத்துடன் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் முன்வைக்கப்படாதவிடத்தும், அத்தகைய தொழில் நியாயசபையின் தலைவர். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பணத்தொகையை அப் பணத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பிலிருந்து வேலையாளருக்குச் செலுத்தப்படச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பிணைப்பொறுப்பின், மீதி எதுவும் இருப்பின், அதனையும் அதன் மீதான வட்டியையும் தொழில் தருநருக்குத் திருப்பிக்கொடுக்கப்படச் செய்வித்தலும் வேண்டும்.

(3) உயர் நீதிமன்றமானது, பின்வரும் விடயங்களுள் எதனிலும், அதாவது, அரசியலமைப்பின் 154ஏ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றமொன்றின் கட்டளையொன்றிலிருந்து 31ஈஈ என்னும் பிரிவின் கீழ் அதற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது அல்லது தொழில் நியாயசபையொன்றின் கட்டளையொன்றுக்கு எதிராக அத்தகைய மேல் நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட மீளாய்வுக்கான விண்ணப்பமொன்றின் மீது அத்தகைய மேல் நீதிமன்றத்தின் கட்டளையொன்றுக்கு எதிராக அதற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது அல்லது தொழில் நியாயசபையொன்றின் தலைவரால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தொடர்பில் அத்தகைய தலைவருக்கெதிராக உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டு எழுத்தாணை, மேற்செல் எழுத்தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை ஒன்றின் தன்மையில் கட்டளையொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்றை அனுமதிக்கும் அல்லது மறுக்கும் அல்லது அத்தகைய தொழில் நியாயசபையின் கட்டளையை வேறுபடுத்தும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையொன்றிலிருந்து அதற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது—

(அ) அத்தகைய மேன்முறையீட்டின் விடயப் பொருளான தொழில் நியாயசபையின் கட்டளையை உறுதிப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய தொழில் நியாயசபையின் தலைவர் 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்து வேலையாளுக்குச் செலுத்தப்படச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) அத்தகைய மேன்முறையீட்டின் விடயப் பொருளாகிய தொழில் நியாயசபையின் கட்டளையை எதிர்மாறுக்குமிடத்து, அத்தகைய தொழில் நியாயசபையின் தலைவர், 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு அதன்மீது திரண்ட வட்டியுடன் சேர்த்து தொழில் தருநருக்குத் திருப்பிக் கொடுக்கப்படச் செய்வித்தல் வேண்டும்;

(இ) மேன்முறையீட்டின் விடயப் பொருளாகிய தொழில் நியாயசபையின் கட்டளையை வேறுபடுத்துமிடத்து, அத்தகைய தொழில் நியாய சபையின் தலைவர், உயர் நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவுசெய்வதற்குத் தேவைப் படுத்தப்படும் பணத்தொகை, அப் பணத் தொகையின் மீதான வட்டியுடன் சேர்த்து 31ஈ (4) என்னும் பிரிவின் கீழ் கொடுத்துதவப் பட்ட பிணைப்பொறுப்பிலிருந்து வேலையாளுக் குச் செலுத்தப்படச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிணைப்பொறுப்பின தும், அதன் மீதான வட்டியினதும் மீதியேது மிருப்பின் அது தொழில் தருநருக்குத் திருப் பிக் கொடுக்கப்படச் செய்வித்தலும் வேண் டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவானது, இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது—

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் பந்தி (ஊ) ஐ நீக்கி விடுவதன் மூலமும்;

(2) அதன் உட்பிரிவு (2) இல் "அமைச்சரால் ஆக்கப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக "இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது பிரிவு 31அ இன் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப் பட்ட" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

7. (1) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று 31ஈ என்னும் பிரிவின் கீழ் தொழில் நியாயசபையொன்றிற்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் அத்தகைய நியாயசபையின் முன்னிலையில் முடிவுறாதிருக்குமிடத்து, அத்தகைய விண்ணப்பத்தையிட்டு அது அவசியமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய எல்லா விசாரணைகளையும் செய்தலும் அத்துடன், அதன் பின்னர் இச் சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து, ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல், நீதியானதும் ஒப்புரவானதுமென நியாயசபைக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குவதும் நியாயசபையின் கடமையாதல் வேண்டும். முடிவுறாத வழக்குகள்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று தொழில் நியாயசபையொன்றின் கட்டளைக்கு எதிராக அல்லது அத்தகைய நியாயசபையொன்றின் கட்டளைக்கு எதிராக அதற்குச் செய்யப்பட்ட மீளாய்வுக்கான விண்ணப்பமொன்றுக்கு எதிராக அல்லது தொழில் நியாயசபையொன்றின் தலைவருக்கெதிராக அத்தகைய தலைவரால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று தொடர்பில் உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டு எழுத்தாணை, மேற்செல் எழுத்தாணை அல்லது ஆணையீட்டெழுத்தாணை ஒன்றின் தன்மையில் கட்டளையொன்றை வழங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்திற்கு எதிராக 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதி மன்றமொன்றுக்கு முன்வைக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு அல்லது தொழில் நியாயசபையொன்றின் கட்டளையொன்று தொடர்பில் அத்தகைய மேல் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையொன்றுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு அத்தகைய நீதிமன்றத்தின் முன்னிலையில் முடிவுறாதிருக்கின்றவிடத்து, விடயத்திற்கேற்றாற்போன்று மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் இச் சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குப் பிந்தாமல் அத்தகைய மேன்முறையீட்டை அல்லது விண்ணப்பத்தை விசாரித்து இறுதியாகக் கையுதிர்த்தலும் வேண்டும்.

8. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.